**அனுப்புநர்**

சா.சேதுராமவர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை - 600 006.

**பெறுநர்**

1. தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மயிலாடுதுறை மற்றும் செங்கல்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.

**ந.க.எண்.** 007150 / எப் 1 / 2023 **நாள்**: 31. 07.2023

**ஐயா/அம்மையீர்,**

**பொருள்** : சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் - மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வு ஜூன்/ஜூலை 2023 – விடைத்தாள் நகல் / மறுகூட்டல்-I விண்ணப்பங்கள் பெறுவது மற்றும் ஆன்-லைனில் பதிவேற்றம் செய்வது குறித்த அறிவுரைகள் - சார்பு.

**பார்வை** : இவ்வலுவலக இதே எண்ணிட்ட செய்திக் குறிப்பு, நாள்.26.07.2023.

-----

பார்வையில் காணும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஜூன்/ஜூலை 2023, மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வு எழுதிய தேர்வர்களுக்கு 28.07.2023 பிற்பகல் முதல் தேர்வு முடிவுகள் மதிப்பெண் பட்டியல்களாக பதிவிறக்கம் செய்து கொள்வதற்கும், அதன் தொடர்ச்சியாக, விடைத்தாள் நகல் / மறுகூட்டல்-I கோரி விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு 01.08.2023 (**செவ்வாய்க் கிழமை**) **மற்றும்** 02 .08.2023 (**புதன் கிழமை**) ஆகிய நாட்களில் **காலை 10.00 மணி** முதல் **மாலை 5.45 மணி** வரை நேரில் சென்று உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களில் (தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு) முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு சென்று தேர்வர்கள் பதிவு செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு விடைத்தாள் நகல் / மறுகூட்டல் கோரி விண்ணப்பிக்க வருகை புரியும் தேர்வர்களிடம் விண்ணப்பங்களைப் பெறுவது குறித்து கீழ்க்கண்டவாறு அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

..2..

1. www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID, password-ஐ பயன்படுத்தி விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து தேவைப்படும் நகல்களை எடுத்துக் கொள்ளவேண்டும்.

2. தேர்வர்கள் விடைத்தாள் நகல் அல்லது மதிப்பெண் மறுகூட்டல்-I கோரி வரும்பொழுது, அன்னாரிடம் ஒரு படிவத்தை அளிக்க வேண்டும். எந்தெந்த பாடங்களுக்கு விடைத்தாளின் நகல் தேவை? எந்தெந்த பாடங்களுக்கு மறுகூட்டல் மட்டும் தேவை? போன்ற விவரங்களை மாணவர்கள் பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தி அப்படிவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்குரிய தொகையினைப் பணமாக பெற்றுக் கொள்ள வேண்டும்.

**விடைத்தாள்நகல்(Scan Copy of the Answer Script) - கட்டணம்:**

| | | |
|---|---|---|
| ஒவ்வொருபாடத்திற்கும் | - | ரூ.275/- |

**மறுகூட்டல்(Re-totalling) கட்டணம் :**

| | | |
|---|---|---|
| உயிரியல்பாடத்திற்குமட்டும் | - | ரூ.305/- |
| ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | - | ரூ.205/- |

3. விடைத்தாள் நகல் (Scan Copy of the Answer Script) கோரி விண்ணப்பிக்கும் பாடங்களுக்கு, தற்போது மறுகூட்டலோ (RT-I) அல்லது மறுமதிப்பீட்டிற்கோ (Revaluation) விண்ணப்பிக்க இயலாது.
4. விடைத்தாள் நகல் பெற்ற பின்னரே மதிப்பெண் மறுகூட்டலுக்கு (RT-II) / மறுமதிப்பீட்டிற்கு (Revaluation) விண்ணப்பிக்க வேண்டும்.
5. விடைத்தாள் நகல் தேவையில்லையென, தேர்வர் விரும்பினால் மட்டுமே மறுகூட்டலுக்கு(RT-I) தற்போது விண்ணப்பிக்கலாம். **இவ்விவரங்களை தேர்வர்களுக்கு மிகத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்.**
6. தேர்வர்களிடமிருந்து பூர்த்தி செய்த படிவத்தையும், கட்டணத் தொகையினையும் பெற்றவுடன், படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விவரங்களை தேர்வர்களிடம் **தவறாமல் உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே** இணையதளத்தில் அவ்விவரங்களைப் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்தினையும் பதிவேற்றம் செய்து, அதற்கான ஒப்புகைச் சீட்டினை சம்பந்தப்பட்ட தேர்வர்களிடம் வழங்குதல் வேண்டும்.

7. இவ்வாறு ஒவ்வொரு நாளும் பணி முடிந்தவுடன், Daily summary report / Daily detailed report இவ்விரண்டையும் click செய்தால் அன்றைய தினம் பதிவு செய்த விவரங்கள் தங்களுக்குக் கிடைக்கும். இந்த அறிக்கையினை பதிவிறக்கம் செய்துகொண்டு, அன்றைய தினம் பதிவு செய்த விண்ணப்பங்களையும் மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட கட்டணத் தொகையினையும் ஒப்பிட்டு சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

8. விண்ணப்பிப்பதற்கு இறுதி நாளான 02.08.2023 அன்று மாலை 05.45 மணிக்கு விண்ணப்பிக்கும் நேரம் முடிவடைந்தவுடன், FINAL SUMMARY REPORT / FINAL DETAILED REPORT என்ற பகுதியினை click செய்தால் தங்கள் அலுவலகத்தில் விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பித்த தேர்வர்கள் விவரங்கள், விண்ணப்பித்த பாடங்கள், பெறப்பட்ட கட்டணத்தின் மொத்தத் தொகை ஆகிய விவரங்கள் தெரியவரும்.

அவ்விவரங்கள் பெறப்பட்டபின் விடைத்தாள் நகலிற்கு விண்ணப்பித்தவர்கள் மற்றும் மறுகூட்டலிற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையினை தனித்தனியாக பட்டியலிட்டு, அதனை www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி கீழ்க்காண் கணக்கு தலைப்பு மற்றும் துறை விவரங்களை பயன்படுத்தி விடைத்தாள் நகல் விண்ணப்பக் கட்டணம் மற்றும் மறுகூட்டல்-I கட்டணத்தினையும் செலுத்திட வேண்டும்.

| | |
|---|---|
| District | PAO (South) Chennai |
| Department receiving receipts | 04304 Directorate of Government Examinations |
| DDO Name | 41010118 Accounts Officer |
| **கணக்குத் தலைப்பு** | 0202 01 102 AA 22711-Copying/ Scanning<br>0202 01 102 AA 22731-Retotalling / Re-valuation |

மேற்கண்டவாறு தனித்தேர்வர்களின் விடைத்தாள் நகல் விண்ணப்பக் கட்டணம் மற்றும் மறுகூட்டல்-I கட்டணத் தொகையினையும் செலுத்திய பிறகு பெறப்படும் Payment Receipt மற்றும் FINAL SUMMARY REPORT ஆகியவற்றினை இணைத்து துணை இயக்குநர் (பொது) (பொ), அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6 என்ற முகவரிக்கு பதிவஞ்சல் வழியாக 07.08.2023-**க்குள்** அனுப்பி வைத்திட வேண்டும்.

**இணைப்பு:** விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கான தொகையினை இணையதளத்தில் செலுத்துவதற்கான வழிமுறைகள்.

**ஒம்/-**

**இயக்குநர்**

**நகல்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
3. எப் 3 பிரிவு (அலுவலகம்),